

ஆகமச் சித்திரங்கள்.பாகம்.3
சிவாகமவிசாரத சித்தாந்தவித்தகர் கலைமாமணி
டாக்டர் பிரம்மஸ்ரீ.சாம்ப.சோமாஸ்கந்த குருஜீ
ஈழநல்லூர் சிவாச்சார்ய குருபீடம் (416 875 2414)

உ


சிவமயம்

ஆகமசித்திரங்கள்- பாகம் .3

என்னை பெற்றெடுத்து பெயர்கொடுத்து அறிவும் ஞானமும் கலையும் புகட்டி என்னுள் இருந்து வித்தகனாய் ஆக்கிவைக்கும் என்பெற்றோர்க்கு இன்நூல் காணிக்கை







- ஆக்கம் -

“சிவாகம விசாரத” “சித்தாந்தவித்தகர்” “கலைமாமணி”

டாக்டர்-பிரம்மஶ்ரீ.சாம்ப-சோமாஸ்கந்த குருஜீ

ஈழ.நல்லூர்.சிவாச்சார்ய குருபீடம் 416 839 2325

உ

பொருளடக்கம்.





வாழ்த்துரை

பேராசிரியர்.கலாநிதி நா.சுப்பிரமணியன். (முன்னைநாள் தமிழ்ப்பேராசிரியர்.யாழ்.பல்கலைக்கழகம்)

சமய நெறியொன்றில் முறையாக ஒழுக விழைபவர்களுக்கு அச்சமயமரபு சார்ந்த வழிபாட்டுநெறி முறைகளில் ஈடுபாடும் பயில்நிலைத்தெளிவும் அவசியம்என்பது வெளிப்படை. “சொல்லியபாட்டின் பொருள்உணர்ந்துசொல்லுபவர்கே இறைபதப்பேறு கிட்டும்”என்பது மணிவாசகப்பெருமான் போன்ற ஆன்றோர்களின் அருள்வாக்காகும்.சொல்லியபாட்டின் பொருள் மட்டுமல்ல அதுசார் செயன்முறைகளும் அவசியமானவை எனக்கொள்வது ஆகமமரபு. இவ்வாறான ஆகம மரபின் சிந்தனைவழி உருவான நூலாக்கமே இது. சிவாகமக் கிரியைநெறிசார் அம்சங்களையும் பொருத்தமான கட்புலக் காட்சிகளாக நம்முன்வைத்து சைவவழிபாட்டுநெறிக்கு வளம் சேர்த்துள்ளார் கலைமாமணி டாக்டர் சாம்பசிவ-சோமாஸ்கந்த குருஜீ அவர்கள்.

இவ்வாறான ஒருநூலாக்கத்திற்கு சமயமரபுபற்றிய பொதுநிலை அறிவுமட்டும் போதுவதன்று சிறப்புநிலை தகைமைகளும் சிலதேவை என்பதுவெளிப்படை. அவ்வகையில்..ஆகமமரபு பற்றிய புலமை ஆராய்ச்சி. மற்றது அம்மரபுசார் கிரியை நெறிகளில் நீண்ட பயிற்ச்சி. மூன்றாவது...ஆகமப்புலமை..பயிற்ச்சிசார் அம்சங்களை ஓர் கலைஞனாக நின்று வெளிப்படுத்தும் புனைவாற்றல் இம் மூன்றுஅம்சங்களை யும் டாக்டர் குருஜீ அவர்களிடம் நிறைவாகப் பொருந்தியிருப்பதைக் காணலாம். அதற்கு அடிப்படைக்காரணம் சிவாகமமரபின் தலைமை யும் பயிற்ச்சித் திறனும் ஆசாரஅனுஷ்டானமும் ஆளுமையும் கொண்ட இலங்கை இந்துமத குருபீடாதிபதியாக தெரிவுசெய்யப் பெற்ற “வைத்தியகலாநிதி” “சிவாகமஞானி” ஸ்கந்த.சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் புதல்வராகப் பிறந்த தவப்பயனேயாகும். இவ்வாறான குருபாரம்பரிய நெறிமுறையில் வேதம்.சிவாகமம்.புராணம்.இதிகாசம்.சைவசித்தாந்தம். தமிழ்சமஸ்கிருத பாலபண்டிதர்வகுப்பு இயல்.இசை.நாடகம். வில்லிசை. கதாபிரசங்கம். சமயச்சொற்பொழிவு. ஜோதிடம். சிற்பம். ஓவியம்.குருத்துவம். இப்படி பல்துறைகளில் சிறப்புநிலை ஆளுமை கொண்ட கலை வல்லுனர் நான்கண்டவரை கலைமாமணி டாக்டர் குருஜீ ஒருவரேதான்.

பல கும்பாபிஷேகங்கள். மகோற்சங்களை தலைமைக்குருவாக நடாத்திவைத்த பெருமையும் தன்னடக்கமும் கொண்டவர். இவரால் முன் னர் எழுதிவெளியிடப்பெற்ற நான்குநூல்களும் சமயஆர்வலர்களுக்கும் குருமார்சமூகத்திற்கும் பயன்பாடுடையதாக அமையப்பெற்றுள்ளது. இவ்வாறான பன்முக ஆளுமைகொண்ட குருஜீ அவர்களின் செயலூாக்கத்தின் முக்கிய தொடர்வெளிப்பாடுகளிலொன்றாக இப்பொழுது வெளிவரும் இந்நூல் சமயமரபுபேணும் நாட்டம் கொண்டவர்களுக்கும் ஆகமமரபுபேணும் குருமார்களுக்கும் பெருவிருந்தாக அமையும் என்பது எமதுநம்பிக்கை. இந்நூலாக்கத்தை தந்துள்ள குருஜீ அவர்கள் இதுபோன்று பயனுள்ள ஆக்கங்களை வெளியீடுசெய்ய இறை அருள்அருளோடு வாழ்த்தியமைகிறேன்.

07-09-2006 நா.சுப்பிரமணியன்.

கலைமாமணி டாக்டர்.குருஜீ அவர்களின் “ஆகமசித்திரங்கள்”பாகம்-3 நூல் சைவஉலகிற்கு பயனுடையதாக அமையவாழ்த்துகிறோம்.

அன்புடன்....சிவஸ்ரீசிவ.நித்யானந்தக்குருக்கள் சஙகானை.

சிவஸ்ரீ.சிவ.காந்தக்குருக்கள்(தலைவர்.இந்துகுருமார்ஒன்றியம்.கனடா)


சிவஸ்ரீ.சாம் ராஜாக்குருக்கள் (சவுத்தாபிரிக்கா டர்பான் விநாயகர் தேவஸ்தானம்)

சிவஸ்ரீ.ராம்.கெங்காதரக்குருக்கள். லண்டன்.

சிவஸ்ரீ.ராம்.சர்வலோகேஸ்வரக்குருக்கள்.(பிரம்டன்.கற்பகவிநாயகர்கோவில்)

சிவஸ்ரீ.வாகீஸ்வரககுருக்கள்.(அலங்காரபூஷணம்)

சிவஸ்ரீ.சிவாஐயா. (ஸ்ரீதுர்கையம்மன் கோவில் மொன்றியல்.)



"சிவாகமவித்வான்" "சிவாகமஞானசாகரம்"
டாக்டர்.நா.சோமாஸ்கந்தக் குருக்கள்
(சுண்ணாகம் கதிரமலைசிவன்தேவஸ்தானம்)

-ஆசியுரை-

இறைவன் அருளின்றி எம்மால் எதையும் செய்துமுடிக்க இயலாது.நமது எண்ணம்நல்லதாயிருப்பின் எடுத்தகாரியங்களை இனிதாகவும்இலகுவாக வும் இறைவன் முடித்துத்தருவான்.

அந்தவகையில் பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட அறிவுக்களஞ்சியங் களாகிய பலஆகம சாஸ்த்திர நூல்களை எழுதிஅச்சேற்றி வெளியீடு செய்துவரும் "முத்தமிழ்குருமணி" சிவாகமவிசாரத" "கலைமாமணி" கலைஞர்.டாக்டர்.சாம்பசிவ-சோமாஸ்கந்த குருஜீ அவர்கள் தற்பொழுது ஆகமசித்திரங்கள்.மூன்றாவது பாகத்தினை வெகுசிரமத்தின் மத்தியில் தயாரித்து வெளியீடுசெய்வது பெரிதும் பாராட்டப்படத்தக்கது.

இவர் பல்வேறு ஆகமங்களை ஆராச்சிசெய்து ஆதாரபூர்வமான பல விஷயங்களை கண்டறிந்து அவற்றை சாஸ்திரோத்தமமாக வரைந்தும் விளக்கங்களுடன் வெளியீட்டுள்ளார்.இதற்கு இவரது ஆகமநுண்ணறிவு ம் சித்திரம்வரையும் கலையறிவும் துணைபுரிந்திருக்கிறது. ஏற்கனவே பத்ரகாளிமண்டப பூஜை. ஆகமசித்திரங்கள் பாகம்-1. பாகம்-2 இப்படி பல நூல்களை வெளியீட்டு தமிழீழத்திலும் தமிழகத்திலும் பாராட்டுப் பெற்றஇவர் "சிவாகமபுராண தத்துவஞானி"இலங்கைஇந்துமதபீடாதிபதி வைத்தியகலாநிதி .ஸ்கந்த-சாம்பசிவசிவாச்சார்யார் அவர்களின்புதல்வர் ஆவார். சிவாகமநுண்அறிவை தந்தையிடம்கற்றுணர்ந்ததோடு நல்லூர் கணபதீஸ்வரகுருகுலத்தில் சமஸ்கிருதபாலபண்டிதர்வரைகற்ற வர்.நல்லூர்ஞானசம்பந்தர்ஆதீனத்தில் சைவசித்தாந்தவித்தகர் பட்டம் பெற்றவர்.இசை.நடனம் ஜோதிடம்.சிற்பம்.சித்திரம்.வில்லிசை.பிரசங்கம் கவிதை என பலதுறை அறிந்தவர்.இவருடையஇந்நூல் சமயஆர்வலர்க ளுக்கும் குருமார் சமூகத்திற்கும் பெரிதும் பயனுடையதாக அமையும்
wellawatta
என்பதில் ஐயமில்லை.இவருடைய இம்முயற்ச்சியை பாராட்டி இறையரு ளோடு நல்லாசி கூறுகிறோம். சுபம்.



யாழ்ப்பாணம்-நவாலியூர்
"பிரதிஷ்டாசிரோமணி" கிரியாகிரமஜோதி"
கலாநிதி.பிரம்மஸ்ரீ.சாமி-விஸ்வநாதக்குருக்கள்
வெள்ளவத்தை.கொழும்பு

-ஆசியுரை-

நமதுநாட்டின் குருபீடாதிபதியாக திகழந்த ஆகமசாஸ்த்திரபுராண மாமேதை வைத்தியகலாநிதி. நல்லூர் சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் புதல்வர் கலைமாமணி சோமாஸ்கந்த குருஜீ அவர்க ளின் "ஆகமசித்திரங்கள்.பாகம்-3" எனும்நூல் வெளியீடு செய்வது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். ஆகமஅறிவும் ஆராச்சியும் கலையும் சிறந்த இவரது 4நூல்கள் ஏற்கனவே வெளியிடப்பெற்று பலருடைய பாராட்டுகளையும்பெற்றவர்.இவருடைய நான்குநூல்களின் வெளியீட் டு விழாவிலும் யான் கலந்து கொண்டேன்.தற்பொழுது வெளியிடும் ஆகமசித்திரங்கள்-பாகம்.3 நூல் முன்னைய நூல்களைவிட சிறப்பு டன் பலவிதஆகம விஷயங்கள் விளக்கப்படங்களுடன் வெளிவருவ தால் இது சைவமக்களுக்கும் குருமார்களுக்கும் மிகவும் அவசிய மான ஒர்பொக்கிஷமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. பலசந்தேகங்களுக்கு விளக்கப்படங்களுடன் 10க்கும்மேற்பட்ட ஆக மங்களை ஆராய்ந்து நமக்கு பலஅரிய விஷயங்களை வெளிக் கொண்டுவந்து தனது ஓவியதிறமையால் சித்தரங்களாக வரைந்து வெளியீடு செய்கிறார்.இவரது திறமையை முயற்சியை பாராட்டுவ தோடு மேலும் பல ஆகமஆய்வுநூல்களை வெளியிட்டு சமயத்தி ற்கும் எமது சமூகத்திற்கும் அரியதொண்டுகள் செய்ய இறைவனை வேண்டி வாழ்த்தி நல்லாசிகளையும் தருகிறேன்.

சுபமஸ்து

பிரம்மஸ்ரீ சாமி-விஸ்வநாதக்குருக்கள்
39.Dr E.A Coorsy mawatta.
Colombo-6 srilanka.



ஏகாம்பரநாதர் துணை தமிழ்நாடு.காஞ்சிபுரம்

"சிவாகமவித்வான்" "சித்தாந்தசாகரம்"

சிவஸ்ரீ.ராஜப்பாக்குருக்கள் அவர்களின்

ஆசியுரை

இலஙகையிலும் பலநாடுகளிலும் சைவசமயத்தையும் முத்தமிழையும் குருத்துவம் கலைபணிகள் என பலதுறைகளிலும் பேராற்றல் பெற்ற இலங்கையின் முதலாவது இந்துமத பீடாதிபதியாக தெரிவு செய்யப்பெற்ற சிவாகமஞானி கிரியாதத்துவமேதை.வைத்தியகலாநிதி அமரர்.அருள்ஜோதி.ஸ்கந்த-சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் குமாரர். சகலாகம விசாரத. சித்தாந்தவித்தகர். கலைமாமணி. **டாக்டர் பிரம்மஸ்ரீ.சோமாஸ்கந்தகுருஜீ** அவர்களின்ஆகமச்சித்திரம் பாகம்-1 பாகம்-2 என இருநூல்களை வெளியீடு செய்து இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் புகழ்பெற்ற இவர் தற்பொழுது ஆகமச்சித்திரம் மூன்றாவது பாகத்தை இதுவரையாரும் கண்டு கொள்ளாத அரிய பலவிஷயங்களை விளக்கப்படங்களுடன் பலஆகம ஆதாரங்களுடன் வெளியீடு செய்வது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. ஆகமசித்திரங்கள் பாகம்-1 கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை சைவத்தமிழ் பாடசாலையில் 1997ல்வெளியீட்டுவிழா அடியேன் தலைமையில் நடைபெற்றது பெருமைதருகிறது. தற்பொழுது மூன்றாம்பாகம் குருமாருக்கும் சைவமக்களுக்கும்.பலகிரிகைகளின் தத்துவங்களை புரிந்துகொள்ள இந்நூல் பேருதவிபுரியும் என்பதில்சந்தேகமில்லை. மென்மேலும் இவரது ஆன்மீக வளர்ச்சிப்பணி தொடர காஞ்சிபுரம் காமாட்சிநாதரின் பேரருள் துணையோடு நீண்டஆயுளும் பேறறிவும் சகல கலைகளுடன் பொருட்செல்வமும் பெற்று சிறப்புடன் வாழ நல்லாசி கூறுகிறோம். **சுபமஸ்து..**

சிவஸ்ரீ.ராஜப்பா குருக்கள்
காஞ்சிபுரம்

சாம்பசிவன்துணை

சர்வதேச இந்துமதபீடாதிபதி இலங்கை சபரிமலை சாஸ்தாபீடம்

அகிலஇலங்கை பிராம்மணஇளைஞர்சமாஜம்



Dr. சிவாகமகலாநிதி சாம்பசிவ

ஸ்ரீ ஐயப்பதாசக்குருக்கள் J.P

வாழ்த்துரை

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய **அண்ணன்** சோமாஸ்கந்த குருஜீ அவர்களின் ஆகமசித்திரங்கள்.பாகம்.3 கிரியைநெறியுடன் ஆகமப்படவிளக்கங்களுடன் வெளிவருவது பெருமகிழ்ச்சி தருகிறது. இந்த அரிய பொக்கிஷம் ஆன்மீக மக்களுககு பயனுடையதாக அமையும். ஆகமஆராச்சியும் தமிழ் சைவசித்தாந்த அறிவும் கலையும் நிறையப்பெற்ற இவர்வெளியிடும் ஐந்தாவது நூலாகிய ஆகமச்சித்தரங்கள். பாகம்.3 கனடாவில் வெளிவருவது அங்குள்ள சைவமக்களின் பேறாகும். எமது தந்தையாரைப்போல் ஆகமவிளங்கங்களை வெளிக்கொணரும் இவர் பல்லாணடு வாழ்ந்து சேவைசெய்ய ஸ்ரீசபரிமலை ஐயப்பசுவாமியைவேண்டி வாழ்த்துகிறேன் இறையருளுடன்..

சிவஸ்ரீ.சாம்பசிவ-ஐயப்பதாசக்குருக்கள்.
கொழும்பு.இலங்கை





உ

சாம்பசிவகுருவே துணை

ஆக்கியோன் உரை....



இந்தமண்ணில் வாழுகின்ற ஒவ்வொருவரும் தாம்வாழும் மண்ணிற்கோ..தம் இனத்திற்கோ தாம்சார்ந்த சமூகத்திற்கோ.... தம்மாலான கடமையைச்செய்தாகவேண்டும். நீ இந்தமண்ணில் வந்துபோனதற்கு அடையாளமாக ஏதோஒன்றை இந்த மண்ணில் விட்டுச்செல்லவேண்டும். நீ மறைந்தாலும் அது உன்னை ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கும். அது இல் லையாயின் மிருகங்களுக்கும் உனக்கும் எந்தவித்தியாசமும் இல்லை. இப்படி என்தந்தையார் எனக்கு அடிக்கடிகூறுவார். கலையின்பால்நாட்டம் கொண்ட கடந்த 30 வருடங்களுக்குமேலான புகழுடன்நிலைத்து சாதனைபடைத்தாலும்..தந்தையின் விருப்பத்திற்காக வேதசிவாகமம்.புராணம்.சிற்பசாஸ்த்திரம்.தமிழ்.சமஸ்கிருத பாலபண்டிதர்.சைவசித்தாந்தம் ஜோதிடம் என கற்றறிந்து குருத்துவத்துறையிலும் பிரவேசித்து..10க்குமேற்பட்ட கும்பாபிஷேகங்கள்..மஹோற்சவங்கள்நடாத்தியுள்ளேன். ஏற்கனனே இலங்கையில் 4 சமஸ்கிருதநூல்களை வெளியீடு செய்துள்ளேன். அதிலே ஆகமசித்திரங்கள்.பாகம்-1,பாகம்-2 இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பெரும் குருமார்களாலும் ஆதீனங்களாலும் பாராட்டப்பட்டு பெரும்புகழை தந்தது. தற்போது கனடாவில் வசித்துவரும் நிலையில் ஆகமசித்திரங்கள்-பாகம்-3எனும் இந்நூலை பலஆகமங்களை ஆராய்ந்து சித்திரவடிவங்களாக விளக்கங்களுடன் உருவாக்கியுள்ளேன்..இதனை அச்சேற்ற பணமல்லாதபோது மொன்றியல் துர்கை அம்மன்ஆலய குரு பிரம்மஸ்ரீ.சண்முக.சுதன்சர்மா அவர்களும்,அவருடைய நண்பர்,வன்கூவர் அன்பா குகன் அவர்களும் தம்மால்முடிந்த பணஉதவிசெய்து ஊக்குவித்தனர்.அவர்களுக்கு என் முதல் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அறிஞர்கள் தகுந்த ஆதாரத்துடன் தெரிவித்தால் நன்றியுடையவனாவேன். மேலும் இந்நூலுக்கு ஆசிகள் வழங்கிய இந்திய இலங்கைக்குருமார்களுக்கும் நூல்வெளிவர பலவகையில் உதவிய நண்பர்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கங்களை தெரிவித்துஅமைகிறேன்.

பணிவன்புடன்......




கலைமாமணி டாக்டர்.பிரம்மஸ்ரீ.சாம்பசிவ.சோமாஸ்கந்த சிவாச்சார்யார்.(குருஜீ)

ஈழநல்லூர்.சிவாச்சார்ய குருபீடம்

ரொரண்டோ.கனடா.   416 839 2325


𑌆𑌲𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌰𑍂𑌪𑌂। ஆலயம் புருஷரூபம்



ஆலயம் புருஷரூபம்

ஸூமுயஂ வ௱௱ஶா௱ஂவஃ| (சயனநிலை) -காரணாகமம்

மஹ்ரூஹஂ ஶிவஹு ஸுய்ஊணுஂ ௱வ௱வூதெ| ஸுணுஹுஹுவநஂ வசெஷுஊஹாஊணுவ உவூதெ|
நூதுஊ௱௱ விஜெஶஂஹூாஸு ஸூஹுவநஂ ஜஂவிஸா ஊதா |ஊஹாமொவ௱௱ வாஊஃஹூாஸு |
ஸூமுயொ ஜெஹஜெவொஸுஃ ஸுமுாதஸுாதூ ௱ஂவஸுஃ|| ஸா௱ணெ||






மனிதஉடலும் கோவில் அங்கமும்-

ஸ்துாலசரீரம்..

பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐவகைபூதங்களால் ஆனதும் நல்வினைப்பயனால் தோன்றியதும் இன்பதுன்பங்களின் இருப்பிடமாய்..இருத்தல்.பிறத்தல்.வளர்தல்.மாறுதல்.தேய்தல்.மாய்தல் ஆகிய அறுவகைமாற்றங்களுக்கு உட்பட்டதுமான அவ்வுடல் ஸ்துாலசரீரம் எனப்படும். காது.தோல்.கண்.நாக்கு.மூக்கு இவைஐந்தும் ஞானேந்திரயங்கள்.(அறிவுக்கருவிகள்) வாய்.கை.கால்.எருவாய்.கருவாய். இவைஐந்தும் கா்மேந்திரியங்கள்(செயற்கருவிகள்) ஒவ்வொரு இந்திரியங்களுக்கும் ஒவ்வொருதேவதை உண்டு.

கண்-சூரியன்
காது-அஷ்டதிக்பாலா்
தோல்-வாயு
நாக்கு-வருணன்
மூக்கு-அஸ்வினி
தேவர்கள்




வாய்- அக்னி
கைகள்-இந்திரன்
பாதங்கள்-விஷ்ணு
எருவாய்-(மலவாய்)-ஜமன்
கருவாய்- பிரம்மா

ச்ரோத்ரஸ்ய திக்தேவதா
த்வேசோ வாயுஃ
சக்ஷு சூா்யஃ
ரஸநாய வருணஃ
க்ராணஸ்ய அஸ்விநோ

வாசோ தேவதா வஹ்னி
ஹஸ்தயோா் இந்திரஃ
பாதயோா் விஷ்ணுஃ
பாயோா் மிறுத்யுஃ
உபஸ்தஸ்ய பிரஜாபதிஃ







அர்ச்சிக்கும் பூர்ண கும்பம்

கும்பம் - உடல்

தேங்காய் - தலையும்.திருமுடியும்.

மாவிலை - சடை (அதிலே தேவர்கள் வாசம்செய்கிறார்களா)

சுற்றியநூல்- எழுபத்தீராயிரம் நரம்புகள்.

சுற்றியஆடை- தோல்

நிரப்பியநீர் - இரத்தம்

தர்ப்பை - குடுமி

கும்பத்தில் இடப்பட்டவை - வீர்யம்

(பொன்.காசு.நவரத்தினம்.திரவியம்)

நவதானியங்கள்- ஆசனங்கள்.(இருக்கை)

நெல்.அரிசி- ஜீவராசிகள்

வாழையிலை - பூமி

உச்சரிக்கும்மந்திரங்கள்- பிராணன் (உயிர்)

(அருவமாய் இருக்கும் இறைவனை அருவுருவாய் ஆக்குவது கும்பத்திலேதான்.பின் உருவமான விம்பத்தில் சேர்ப்பதே கும்ப அபிஷேக தத்துவமாகும்.)

மங்கலவைபவங்களிலே பூரணகும்பம் வைப்பது..இறைவன் சாட்சியாக இவ்வைபவம் நடக்கிறது என்பதற்காகவும் இறைஅருளோடு உங்களையும் வரவேற்கிறோம். என்பதை குறிப்பதற்குமாகும்.

மேலும் எட்டுமங்கலப்பொருட்களில் கும்பமும் ஒன்றாகும்.

சகலகாரியங்களுக்கும் முதலில் **புண்ணியாகம்.** ஶுண்யாஹம் ஶுஃஃ।

ஶுகாரம் பாபநாஶம்ஸ்யாக ।ண்யகாரம் தேஹஶுஷ்ம் ।

ஹகாரம் ஸ்தாநஶுத்ஸ்யாக ।ஶுண்யாஹஞ் விதீயதே॥ (ஸூக்ஷ்மாஹஜ)


வாதேணாஃயிதைவத்யம் ஶுஷெ ப்ரஹ்ரப்ரகீர்த்திதா ।


ஃஷ்யஞ் விஷ்ணுதைவத்யம் ஒஷ்ம்வை ரூஷதைவதஃ ।

வாஸ்யொநந்திகாஉளவ ஃயூஃ ஸப்த தீர்க்கஃ ॥ (வாதுளே)

ஶுண்யாஹஶுொக்ஷணம்யஸ்யாம் க்ரியாயாம் ந கரோதிஹி । (காமனெ)







பு - பாபநாசத்தையும் **ண்ய** - தேகசுத்தியையும் **ஹ**- இடத்தின்சுத்தியையும் செய்வதால் புண்யாகம் என சொல்லப்படுகிறது.

வருணகும்பத்தின் அடிப்பாகத்தில் பிரம்மாவும் நடுவில் விஷ்ணுவும் கும்பவாய்பகுதியில் ருத்திரனும். பக்கங்களில் நந்தியும்.மஹாகாளரும். நீரின்நடுவே கங்கை.யமுனை.நர்மதை சரஸ்வதி.கோதாவரி.காவேரீ.தாம்ரபர்ணீ ஆகிய ஏழுபுண்யதீர்த்தங்களும் இருக்கின்றன. என வாதுளாகமத்தில் சொல்லப்படுகிறது.

புண்யாகநீர் தெளிக்காமல் எந்தக்கிரிகையும் செய்தல்கூடாது.

புண்யாகம் என்பதில் முதலில் சங்கல்ப்பம் விநாயகவழிபாடு. வருணகும்பபூஜை பஞ்சகவ்ய பூஜை.ஜெபம் என்பன நடைபெற்று நீர்தெளித்தலாகும்.

நீர்தெளிக்கும் போது அகோராஸ்திர மந்திரத்தினால் தெளிக்கப்படும்.அப்படிதெளிப்பதினால் பூத பிரேத பிசாசுகளின் நடமாட்டங்கள் விலகிவிடும்.ஏழுதீர்த்தங்களின் நீரால் தெளிப்பதற்கு ஒப்பாகும்.

ஹும்வஃஞாஸ்த்ரஃணெ யூவஶீவெ ந ஶூஜயெகு।


கவொராஸ்த்ர ஃணெ ஶுொக்ஷயெத்தூஃ வாரிணா ॥ (வாதுளே)

சமுத்திரங்களுக்கும் நதிகளுக்கும் அதிபதியான வருணனின் மனைவி பெயர் ஹர்ஷிணீதேவி . வாகனம்-மகரம் திக்கு-மேற்கு




கோமாதா 𑌗𑍋𑌮𑌾𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵 𑌦𑍇𑌵𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌃।

பசுவில் எல்லாத்தேவர்களும் வாசம் செய்கிறார்கள்.அதனால்தான் கோமாதா என போற்றப்படுகிறது. புதியகட்டிடம் புதியவீடு. புதியஆலயம் ஆகியவறறில் கோவாசம் செய்யப்படவேணடும்.பசு புகுந்தால் எல்லா பாவங்களும் போகும்.பசு இருக்கும் வீடு எல்லாசெல்வங்களும் சேரும். பசுவைக்கொன்றுதின்பவன் பாழ்நரகில் கிடப்பான். அவன்குலமும் நாசமுடையும்.



திருவிளக்கு ***ீவழ*** **காலை மாலை வீட்டில் தீபம் ஏற்றிவைத்தவர் சர்வமங்களமும் அடைவர்.**



நெய்த்தீபம் - செல்வம் பெருகும்
எள்எண்ணைதீபம் - தரித்திரம் விலகும் சனீஸ்வரன்அருள்கிட்டும்
தேங்காய்எண்ணை - ராகு கேது தோஷங்கள் விலகும்.
இலுப்பெண்ணை - குலதெய்வத்தின் அருள்கிடைக்கும்.
கடலைஎண்ணை-மரக்கறிஎண்ணை - ஏற்றக்கூடாது. பீடை தரும்

பஞ்சுத்திரியில் ஏற்றுவது - சுகம்.மங்களம் கிடைக்கும்.
சிவப்பு திரி- திருமணதடை.குடும்மபிரச்சனை தீரும்.
மஞ்சள்திரி - அம்மன் அருள் கிட்டும்
வெள்ளைத்திரி - தெய்வக்குற்றம் நீங்கும்.
வெள்ளெருக்கம்திரி - துஷ்டஆவிகள் விலகும்.
தாமரைத்தண்டுதிரி- லட்சுமிகடாட்சம் கிடைக்கும்.
ஓருமுகத் தீபம் - மனச்சஞ்சலம் விலகி புகழ்உண்டாகும்.
இருமுகத்தீபம் - குடும்பஒற்றுமை.வாக்குவன்மை உண்டாகும்.
மூன்றுமுகத்தீபம் - ஊழ்வினைத் தோஷம் அகலும்.
நான்குமுகதீபம் - வீடு.வாகனம். கால்சடை என்பன விருத்தியடையும்.
ஐந்துமுகதீபம் -சகலதோஷங்களையும் நீக்கி செல்வம் பெருகும்.

வெறும்நிலத்தில் தீபத்தைவைக்கக்கூடாது. வாயால்தீபத்தை அணைக்க கூடாது. .

அன்பு.தன்னடக்கம் .நிதானம் நற்குணம் சமயோசிதபுத்தி எனஐந்தும்.
ஓர்பெண்னுக்கு ஐந்துமுகதீபம் ஏற்றுவதால் உண்டாகும்.
வாழையிலையில் மஞ்சள்அரிசிபரப்பி மண்..பித்தளை .வெள்ளி.
தீபங்கள் ஏற்றினால் பல நன்மை உண்டாகும்.
ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி.அமாவாசைகளில் தீபபூஜை
செய்வதால் சகலநன்மைகளும் கிடைக்கும்.




தாம்பூலம் (வெற்றிலை) *தாംபூ᳚லாயி தெவதா ।*

தாംபூ᳚லாஹ்ரே வாணீவஸ்ாகு தநுஃமெ்ய வஸெளாஃக்ஷீஃ ।
ஃ᳚மூ வஸதி வாஜேஷ்ா தஸ்ாகு ஃ᳚மூஞ வஜ்᳚யெகு ॥ கூாவணெ।

வெற்றிலையின் நுனிப்பகுதியில் - சரஸ்வதியும்;
நடுப்பாகத்தில் -- லட்சுமியும்; காம்புப்பகுதியில் -மூதேவியும் வசிக்கிறார்கள்.
அதனால் காம்பை நீக்கிவிடவேண்டும்.

முன்னையுள்ளோர் வெற்றிலை போடும்போது காம்பை கிள்ளிஎறிந்துவிட்டு நுனியைகிள்ளி புந்தியில் ஒட்டிவிடுவார்கள் ஏனெனில்;சரஸ்வதியை புத்தியில் இருத்தவே.




மேலும் எல்லாத்தெய்வங்களுக்கும் நைவேத்தியமாகபடைக்கப்படும் ஒரே இலை-வெற்றிலைதான்.
வெற்றியையும் மங்கலத்தையும் தரும் இலை அதனால்தான்....வெற்றிலை வைத்து அழைப்பது என்னும் சம்பிரதாயம் பேணப்படுகிறது.
வெற்றிலைபோடுவது என்றுஏன்சொல்கிறார்கள்.
வாயிலே சாப்பிடுவது.என யாரும்சொல்வதில்லை காரணம்..மங்கல அலங்காரப்பொருள் காப்புபோடுவது..சங்கிலி போடுவது போல வெற்றிலைபோடுவது என்றாயிற்று.
எமதுசமயத்தில் வெற்றிலை இல்லாத கிரிகைகனே இல்லை.



மங்கலத் தோரணம்


அமங்கலத் தோரணம்



நாஃபிகெொ வதெ்ண தொ௱ணஂ வஹுஃஹாநிஷு
ஸவ்ஜஂமஜ கூாயெ்ஷு ஹ௵ஜள உஶ்நெ ஹுதா॥

மங்கலத்தோரணமானது தென்னைமரத்தின் மஞ்சள்நிற குருத்தோலையில் ஐந்து தளங்களுடன்இருமுனைகளும் பூமியை பார்க்கும்வண்ணம் கட்டப்பட வேண்டும்.

கண்.காது.தோல் நாக்கு.மூக்கு.ஆகிய ஞானேந்திரியங்களாலும் வாய்.கை.பாதம்.எருவாய்.கருவாய் ஆகிய கர்மேந்திரியங்களாலும் ம்.பூமியில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் இறைவனை நோக்கியே எமது செயல்பாடுகள் அமைகின்றன.என்பதை விளக்குவது.



அமங்கலத்தோரணம்

அறம். பொருள் இன்பம் அனுபவித்த ஆன்மா பூவுலக வாழ்வை முடித்து மேலுலகவாழ்வில் வீடுபேற்றை நோக்கி இருவினைகளுடன் சென்றுகொண்டிருக்கிறது. என்பதை விளக்குதல்.

மாவிலை கட்டும்போது..அதன்காம்பு முன்பக்கம் எடுத்துக் குத்து தல் வேண்டும். மேலும் கொத்தாக கட்டுதலும் நன்மைதரும். அமங்கலத்தில் மாவிலை கட்டக்கூடாது.



குரு மகத்துவம்.

ஆத்மார்த்தஞ்ச பரார்த்தஞ்ச ஆதிசைவேந பூஜிதம் । ஆதிசைவ இதிப்ரோக்தம் ஸ்ஸிவ ப்ராஹ்மணோ ஶுபம் ॥

ஆன்மார்த்தமான பூஜைகளையும் நாட்டுமக்களுக்காக செய்யப்படும் ஆலய பரார்த்தபூஜையும் ஆதிசைவ அந்தணர் கள்தான் செய்தல்வேண்டும். அவர்கள்தான் சிவன் என்றும் குருஎன்றும் பிராமணர் என்றும் கொள்ளப்படும். என்று காரணாகமம் நித்யார்சனாவிதிபடலத்தில் கூறப்பட்டுள்ளது.மேலும்.....

ஶிவேந பாவிதம் ஶைவ ஶைவேந பாவிதம் ஶிவம்। ஶிவஶைவவிஶேஷாத்மா ஶிவப்ராஹ்ண உச்யதே॥

சிவனால் சைவமும் சைவத்தால் சிவமும் தோன்றியது. இந்தசிவ சைவ ஐக்கியத்தில் சுத்தாத்மாவாக சிவபிராணர் தோன்றினர் எனவும் காரணாகம் கூறும். அதனால்தான் குருபிரம்மா குருவிஷ்ணு குருதேவோ மகேஸ்வரக.என்று கூறப்படுகிறது. அப்படியான **குருவானவருக்குரிய தகுதிகள்** பற்றியும் சிவாகமங்கள் கூறும்...

எல்லாசாஸ்திரங்களிலும் உள்ள தத்துவங்கள் புரிந்தவராகவும். ஆலயசம்பந்தமுடைய கலைகளில் தேர்ச்சியுடயவராக நான்குதீட்சை பெற்றவராகவும் சிகையுள்ளவராகவும்(குடுமி) ஆகமம் வேதம்.சைவசித்தாந்தம்.ஆகியவற்றில் நன்கு பாண்டிதயம் உள்ளவராகவும் சமயம்சொல்லும் ஆசாரஒழுக்கம் உடையவராகவும். குடி .களவு .கொலை. மாமிசம். பொய்கூறல் அபிசாரம் அற்றவராகவும் கை கால் கண் போன்ற எல்லா அவயவங்களும் பின்னமில்லால்



நேர்தியாக உள்ளவராகவும் எப்பொழுதும் கண்டத்தில் ருத்திராட்சம் அணிந்தவராகவும் திருமணம்செய்து குடும்பஸ்தர்களாக உள்ளவர்களே ஆலயங்களில் குருவாக இருக்கும் தகுதியுடையவர்கள் என ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது.

கு-என்றால் அக்ஞானம். **ரு**-என்றால் நீக்குபவர். மக்களுக்கேற்படும் சந்தேகங்களை அறியாமையை நீக்கி ஆதாரபூர்வமாக விளங்கவைத்து ஞானத்தை கொடுப்பவரே குரு. அப்படியான குருவுக்கு பழிசெய்தல் இறைவனுக்குசெய்வதைவிட கொடுமையானது.

வேதவாக்கியம்...

இறைவனுக்கு ஒருபழிசெய்தால்..அப்பழிநீங்க குருவைக்கொண்டு பிராயச்சித் தம் செய்யலாம். குருவுக்கே பழியைச்செய்தால்? யாராலும் மாற்றமுடியாது..



-ஆதிசைவஅந்தணர் உள்ளங்கை-


மணிபந்தே ப்ரஹ்மவிஷ்ணூ । அங்குஷ்டே து விநாயக: ।
தர்ஜந்யாம் ஶங்கரஶ்சைவ । மத்யமாயாம் வ்ருஷத்வஜா ।
அநாமிகாயாம் தேவீ ச । கநிஷ்டாயாம் குஹஸ்ததா ।
கரமத்யே து வஹ்நிஶ்ச । ப்ருஷ்டே சந்த்ர ஸூர்யகா: ।
ரேகாஸு ஸர்வதேவாஶ்ச । வஸந்தி ந ஸம்ஶய: ।
ஆதிஶைவஸ்ய பூஜா ச ஸர்வஸித்திகரீ ஸ்ம்ருதா ॥ (காரணே)



மணிக்கட்டில் - பிரம்மாவும் விஷ்ணுவும் இருக்கிறார்கள்.
கட்டைவிரலில் - விநாயகரும்
ஆட்காட்டிவிரலில் - ஈஸ்வரனும்
நடுவிரலில் - விருஷபதேவரும்
மோதிரவிரலில் - அம்பிகையும்
சின்னவிரலில் - முருகனும்
உள்ளங்கைநடுவில் - அக்கினி பகவானும்
பின்பக்கம் - சூரியசந்திரரும்
நகங்களில் - நட்சத்திரங்களும்
ரேகைகளில் -சர்வதேவர்களும் வசிக்கிறார்கள்.சந்தேகம்இல்லை.
ஆதிசைவகுருமார்களின்(அந்தணர்) பூஜைதான்
எல்லாவிதமான சித்திகளையும் தரவல்லது. என
காரணாகமம் கூறும்.



பெரியமணி ஃஹாவணா



கூமஜாய்ஞு ஜெவாநாம மஜநாய்ஞு ராகூஷவாம

கூவெ்வணாரவம தத ஜெவபாஹூாந கூாரண ॥

தேவர்களை வரவழைக்கவும் அசுரர்களை விரட்டவும் மணியடிப்பதின் காரணமாகும்.

ஸாநாஜஊ வ தஜஜெவ ஹூவ்நாஜெ தயெவவ।

நைநெவெஜூாஜஊ ஜொதவாஜஊ தஜஜெ நத்நாஜகெ।


ஊவஜாயிஷு கூாமெஷு ஃஹாவணாஞு தாஊயெகு॥

அபிஷேக ஆரம்பத்திலும்.முடிவிலும். அர்சனைமுடிவிலும் நைவேத்தியகாலத்திலும் உற்சவத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும்நர்த்தனத்தின் முடிவிலும்.பெரியமணி அடிக்கவேண்டும்.

ஓங்கார நாத ஓசை ஊரெல்லாம் கேட்க எங்கும் இறை சிந்தை ஏற்படும்.



கைமணி - தநுவணா



கூமஜாய஁ஞு ஜெவாநாஂ மஜநாய஁ஞு ஈாக்ஷஸாஂ।
கூெவ஁வணாஈவஂதது ஜெவஊாஹூாந கூாஈணஃ॥

தேவர்ளை வரவழைக்கவும்,அசுரர்களை விரட்டவும் மணியடிப்பதின் காரணமாகும்.

ஸஞதஂ தாஊயெகூவணா ஸவ஁விவு நிவாஈணஂ।
வணாதாஊநஹீநஂ யகூகூ஁தகூ நிஷ்முஂ ஸவெகூ॥

எப்பொழுதும்பூஜையில் மணிஅடிப்பதால் எல்லாவித விக்னங்களும் நீங்கிவிடும். மணிச்சத்தம் இல்லாதுசெய்யும் காரியங்கள் பயனற்றுப்போகும்.

ஸகூநாஊஞு ஜொக்ஷாய஁ஂ। ஶிநாஊஂ ஹொமஸிஊயெ।
நாஊதுயஂ ஸவ஁ஸிஜெ்ய வணாநாஊ ஸமுஂஸவெகூ॥

ஒருதாள ஓசையுடன் மணிஅடிப்பதால் மோட்சமும்.இருதாள ஓசையுடன் அடிப்பதால் போகங்களும்,மூன்றுதாளஓசையுடன் அடிப்பதால் சகலசித்திகளும் உண்டாகும்.

எல்லா வாத்தியங்களிலும் முதன்மையானதும் ஓங்காரநாதமாய் விளங்குவதும் மணிஓசையாகும்.




தெய்வீக இசைவாத்தியங்கள் ... நந்திவாத்யம் - மிருதங்கம் (மத்தளம்)

சிவபெருமானுடைய 108 தாண்டவத்தின்போது பிரம்மதேவரினால் மண்ணும் பொன்னும் கலந்த உருவாக்கப்பட்டதே மிருதங்கம்.

(**மிறுத்** - மண் **தங்கம்** - பொன் - **மிருத்தங்கம்**)



இதனை நந்திதேவர் இறைவனருளால் முறைப்படி சிவனின் தாண்டவத்தின் போது வாசித்தார். சிவோற்சவங்களிலும் நடேசர் உற்சவங்களிலும் மிருதங்க வாத்தியத்துடன் வீதிவலம் வருதல் சிறப்பாகும்.





ஆலயங்களில் மிருதங்கஇசை வாசிப்பது இறைவனுக்கு மகிழ்ச்சிதரும்.

பேரிகா ரூபம் **ஹெரிகாரூவம்**

இடதுவளையம்- சூரியன் பிரம்மா ருத்திரன் விஷ்ணு **வலது வளையம்** சந்திரன்


கட்டப்பட்ட வார்தோலில் - அஷ்டநாகங்கள்

1.அனந்தன். 2.வாசுகி 3.தட்சகன் 4.கார்கோடகன்.

5.சங்கபாலன் 6.குளிகன். 7.பத்மன் 8.மஹாபத்மன்

பேரீ தேவதையானவர்...சங்கு.சக்கரம்.திரிசூலம் ஆகியமூன்று கண்கள் உடையவராய்; டங்கம்-சூலாயுதம்-தண்டம்-தாளம் ஆகியவற்றை கையில் ஏந்தியவராய் மூன்றுகால்கள் உடைய வராய் தாமரைஆசனத்தில் எல்லாலட்சணங்களும் பொருந்திய பேரீதேவதையை எப்பொழுதும் தியானிப்போமாக.

பூலோகம்.சுவர்க்கம்.பாதாளம் எல்லாஇடமும் வசிப்பவராகிய பேரீதேவதையானவர் தமது லயநாதத்தால் மூவுலகில் உள்ள துஷ்டதேவதைகளையும் தீயனவற்றையும் நீக்குகிறார். அதனால்தான்.ஆலயங்களில் தவுல் பூஜிக்கப்பட்டு வாசிக்கப் படுகிறது.



கோணங்களில்--ஸ்கந்தர்

தண்டத்தில்...

சப்தமாதாக்கள்

1.பிராம்மி
2.மாகேஸ்வரி
3.கௌமாரி
4.வைஷ்ணவி
5.வாராகி
6.மாகேந்திரி
7.சாமுண்டி

பேரீ மூன்றுவகைப்படும்.


1.தேவமங்கள பேரிகை
2. ராஜமங்களபேரிகை
3. அமங்கல பேரிகை.

ஹெரிகா ஧்யாநம்

நாஉம் கிரீடிதநூக்தம் ஶ்ரூமாஷுது ஜவாநிஹம் ।
ஶம்வம் வக்ரம் திரிஶ்ரூமாக்ஷம் டம்வம் ஊணாயயம் கஜொ꞉ ।
ஷவஸுக்ஷண ஷம்யுக்தம் திரிவாஉம் வஉஷம்ஷிதம்।
விஷயெக ஹெரிகாரூவம் ஧்யாக்வா நாஉ கூதிம் ஷஉா ॥



மங்கல (நாதஸ்வர) ராகதேவதை (நாதம்+ஸ்வரம்)



சீவாளியின் கீழ் பகுதியில்- அஷ்டநாகங்கள்...

1. அனந்தநாகம்
2. வாசுகி நாகம்
3. தக்ஷகநாகம்
4. கார்கோடகநாகம்
5. சங்கபாலநாகம்.
6. குளிகநாகம்.
7. பத்மநாகம்
8. மஹாபத்மநாகம்.

அதனால்தான் நாகசுரம் என்றபெயர் வந்தது. மேலும்..மகுடியைத்தவிர வேறு எந்தஇசைக்கும் மயங்காத நாகங்கள் நாதஸ்வர இசைக்கு மட்டுமே மயங்கி ஆடும்.

முன்னொருநாள் சிவன்தாணடவத்தில் சுருதி பேதமாக விஷ்னு புல்லாங்குழல் வாசித்தபோது சிவன் தன் கழுத்தில்இருந்த நாகத்தைஎடுத்து இனிமையாகசுரத்தை வாசித்து காண்பித்தார். இதுவே நாகஸ்வரமாக மாறியது. என கர்ண வழி கதையும் உண்டு.

இசைவடிவான கலைவாணியே எல்லாக்கலை களுக்கும் தாயாய் ராகதேவதையாய் விளங் குகிறாள் என வேதபுராணங்கள் கூறும். மங்கலமான இடங்களிலெல்லாம் நாஸ்வர ஓசையே இறைஇன்பம் தரும்.


தெய்வீக இசைவாத்தியங்கள் ... வீணா (வீணை) ஏகாந்தவாத்தியம்

இந்த பிரபஞ்சத்தின் உயிர்நாடியாக விளங்குவது பிரணவம். பிராணவாயு அக்னியுடன் கலந்து உருவாக்குவதே நாதம். இந்தநாதப்பிரம்மம் உயிர்களிடத்தில் நாபியில் தோன்றி இதயத்தின்மூலம் உயிர்ப்பு எய்தி தொண்டைக்குழி வழியாக இசையாய் வெளிப்படுகிறது. இந்த இசையும் ஓர் வேதம். இசை மக்களுக்கும் இறைஅருளுக்கும் ஆதாரமாகும்போது வேள்வியாகிறது.இசையால் மக்களையும் இறைவனையும் வசமாக்கலாம்.


வேதங்களில் முதல்இசைக்கருவியாக கூறப்படுவது வீணா. சிவபெருமான் முதலில் இந்தவீனையை இசைத்தார்.பின் கலைவாணியாகிய சரஸ்வதிக்கு அளித்தார்.பெரும்சிவபக்தனாகிய இலங்கைமன்னன் ராவணேஸ்வரன் இறைவன் முதலில் இசைத்த வீனையை தனதுநாட்டின் தேசியகொடியாக ஆக்கினான் தானும் (நாட்டுமக்களும்) வீணைஇசைபயின்று பெரும்வித்தகனாகிளான். அதனால் சாமகானம் இசைத்து இறைவனையே மயக்கினான். தமிழ்தந்த அகஸ்தியரும் நாரதரும் தும்புருவும் எப்பொழுதும் வாசிப்பார்கள்.இசைக்கு தலையாகவிளங்கும் சப்தஸ்வரங்களும் இறைவன் திருமுக அலங்காரமாக எழுந்தவை. **ஸ** -சர்ப்பம் **ரி** -ருத்திராட்சம் **க** -கங்கை **ம** -மிறுகம் (சிவன்கையிலுள்ளமான்) **ப** -புஷ்பம். **த** -தமருகம்(உடுக்கை) **நி** -நிசாகரன். (நிலவு.சந்திரன்) இதுவே **7** ஸ்வரங்களாயின.

ருத்திரனால் இசைக்கப்பட்டதால் ருத்திரவீனை எனபெயர்வந்தது. சரஸ்வதிவீணை வாணி வாசிப்பதால் பெயர்பெற்றது. பரிவாதினி என்னும்வீனை பல்லவன் மகேந்திரவர்மன வாசித்து புகழடைந்தான்.தட்சிணாமூர்த்தியும் வீணைவாசிக்கிறார். உடலிலும் முதுகுப்பக்கத்தை வீனாதண்டம் என கூறுவர்









ஆலயங்களில் வீணைஇசை வாசிப்பது இறைவனுக்கு மகிழ்ச்சிதரும்.

சிவனின் 108 தாண்டவத்தின்போது எட்டுக்கரங்களையுடைய
பாணாசுரன் என்பவன் வாசிக்கும் பஞ்சமுக வாத்தியம்



சங்கநிதி



பதுமநிதி




பஞ்சமுகவாத்தியம்

ஞானகட்கம் **ஜ்ஞாநவகூ॥**

யாகசாலையில் சிவன் வாத்தனியை இணைக்கும் ஞானகட்கம்.

ஷட்த்ரிஂஶக உஹ் ஷஂமரஹு ஜ்ஞாநவட்ஂ கூரகூா ।
முப்பத்தாறு தர்ப்பைகளால் ஞானகட்கம்செய்க.

கூருஹ் வதாஂமுஂ ருநிஷ்டைவ தஓய்கஂ।
தாடுாஊாத் ஷஸொவெதஂ காயெதெணிஙாய்நஂ।
ஹவுஷஂருஹணாய்ாய ஐஜெயவெஓாஂமுஂ ஷவெக॥
வாஶுயொஊ்யஂமுஂவெராகுஂ தயெைவஷுஷஂயாதஃ।



ஆழ்ந்து அகன்று நுண்ணியமாக இருப்பது ஞானம். அறியாமை என்னும் இருளைவெட்டும் **ஞானவாள். ஞானகட்கம் எனப்படும்.**

36 தர்பைகளால் பின்னப்பட்ட ஞானகட்கத்தின் நுனிப்பாகம் 4 அங்குலம் உடையதாவும். முடிச்சு அதில் அரைப்பங்கும். இரண்டுபக்கங்களிலும் சமனான நாக்கு போன்ற வழைவு உடையதாயும் கட்டப்படவேண்டும். கைபிடிப்பதற்காக நடுவே 4 அங்குலமுடையதாகவும் பக்கங்களில் தாலமாத்திர அளவு 2அங்குலமுடையதாகவும் பின்னப்பட்டதே ஞானகட்கம் ஆகும்.

ஆன்மகோடிகளின் ஆணவாதி மலங்களை நீக்கும் பொருட்டு இறைவன் ஐந்துமுகம் பத்துகைகளுடன் யாகத்தில் யாகேஸ்வர யாகேஸ்வரியாக அதிஷ்டித்து நின்று அருளவே இருவயையும்இணைத்து ஞானகட்கம் சமர்பிக்கப்படும்

மிறுத்சங்கிரகணம் (மண்எடுத்தல்) முளைப்பாலிகைபோடுவதற்காக மண்ணைப்புனிதமாக்கி எடுப்பது

ஊரதுஂஞஹண வியிஃ

நதீதீஉ தடாகெவா கெதாஉ உஹ்ஜமுகெ। ஹெவாஹெ வஸ்வதெவெவ ஸாஙெஷெஹெ வூவெஸயெகு॥

நதிக்கரை.குளக்கரை.தர்பைமுளைக்கும்இடம். வயல் பசுத்தொழுவம்.மலையடிவாரம் அவ்விதம் சுத்தமான இடங்களில் மண்எடுக்கலாம். (சிந்தியாகமம்)

சப்தவாரி கும்பம்

	6	2
5	1	7
	4	3


1.க்ஷீர சமுத்திரம்
2.லவண சமுத்திரம்
3.இக்சு சமுத்தரம்
4.சுதாசமுத்ரம்
5.சர்பிசமுத்திரம்.
6.ததிசமுத்திரம்
7.சுத்தோதக சமுத்திரம்

மண்டலம்


7	8	9
6	1	2
5	4	3

மண்டலத்தில...
1.சிவதத்வம்
2.சதாசிவதத்வம்.
3.ஈஸ்வரதத்வம்
4.வித்யாதத்வம்.
5.மாயாதத்வம்
6.காலதத்வம்
7.நியதிதத்வம்
8.புருஷதத்வம்


பூமிதேவி




குந்தாலி



அஸ்திரதேவர்






பூமாதேவி


ஒன்பது சூத்திர மண்டுகபத வாஸ்துமண்டலம். ஊண்டூகவழஃ।


ஊண்டூகூ வாஊஸாயிகூ வஉள ஆிவியம் ஹவெகு। ஊண்டூகூம் ஒெவதாநாஙு வாஹு நாஙு ஶிவம்ஹவெகு॥ (ஊிஙூம்)

வாஸ்து மண்டுகம்.பரமசாயி என இருவகைப்பேதம்உண்டு.**மண்டுகபதம் சிவனுக்கும்,ஆண்தெய்வங்களுக்கும் செய்யப்படுவது.**

வாஸ்துபூஜை மூன்றுவிதம் - 1.சரவாஸ்துபூஜை 2 ஸ்திரவாஸ்து பூஜை 3.உபயவாஸ்து பூஜை







சரவாஸ்து - பிரம்மாமுதல் லோகபாலர்வரை பூஜிப்பது..
இது எற்சவ காலங்களில் செய்யப்படுவது.

ஸ்திரவாஸ்து- லோகபாலர்முதல் பிரம்மாஷ்டகம்வரை பூஜிப்பது.
இது பிரதிஷ்டா காலங்களில் செய்யப்படுவது.

உபயவாஸ்து- முதலில் பிரம்மாஷ்டகத்தை பூஜித்து பின் பிரம்மாவையும் லோகபாலர்முதல் ஷட்பதம்வரை பூஜிப்பது
இது பிராயச்சித்தங்களில் செய்யப்படுவது.





பரமசாயிபத வாஸ்துசாந்தி (பத்துசூத்திரங்களை (86பதங்கள்.) கொண்டது)

தேவீநாம் ஸுந்யஶக்தீநாம் ஶூலம் வாஸ்து ஶாயிகஃ ॥ - (விஜ்ஞாநே)

தேவீநாம் வாஸ்துஶாயிகா ॥ - (காரணாகமே)

தேவிஆலயங்களில் பிரதிஷ்டை உற்சவம். நூதன கிரியா காலங்களிலும் பரமசாயிபத வாஸ்து செய்தல்வேண்டும். மேலும்; முருகன் ஆலயத்திலும் பரமசாயிபத வாஸ்துசாந்தி செய்ய விதியும் உண்டு.






பூமியை சுத்தம்செய்வதற்காகவும் பூமியில்ஏற்படும் அபராதங்கள் போக்கவும் இக்கிரிகை செய்யப்படும்.

ரக்ஷோக்ன ஹோமமண்டலம். கும்பாபிஷேக கிரிகைகளில் ரக்ஷோக்னஹோமமும் ஒன்று.

ராக்ஷஸாஸுர நாஶாய க்ரியதே ரக்ஷோக்ந ஹோமக:॥ (ஸாமாந்யவெ)


ராக்ஷசர்கள் அசுரர்கள் ஆகியோரின் தீமைகள் அழிவுக்காக இக்கிரிகை செய்யப்படும்.



பிரவேசபலி ப்ரவெஶபலிஃ ।

ஜ்ஶாதி ஶாணெஷெஶ ஜநாநாம் ஶொமவீஷநெ| வஶ்ஶாதிஶாணெப்ராவெ் ஶாஜவீஷாதி கூாஶணெ|
கூஷ்ணாதி ப்ரதிஷ்ாஹ தடாகூவநகூாய்கெ । ஸஷ்நூதந கூாயெஷ்ஷ ப்ரவெஶபலிஶ்சூதெ ॥ (ஸ்ாயம்ஷுவெ)

நாட்டில்வாழும் மக்களுக்கு ஜ்வரம்பேன்றவற்றால் மரணம்வராமலும்.நோய்கள்வராமலும் நான்குகால் பிராணிகளுக்குமரணம் என்பன வராமலும்.நாட்டைஆழ்பவனுக்கு நோய்வராமலும் இருக்க..புதியஆலயநிர்மாணப்பணிகள் தொடக்கம்கும்பாபிஷேகம் வரையிலும் வேறு எந்தவொரு புதிதான காரியம் செய்யப்படுகிறதோ அவ்வேளை பிரவேசபலிசெய்யப்படல் வேண்டும்.என்கிறது.ஸ்வாயம்புவம்எனும்ஆகமம்



பிரம்மசந்தி- (கோபுரவாசலுக்கருகில்) இங்கே எட்டிதழ்பத்மத்தின் நடுவே மகாலலட்சுமி.எட்டுஇதழ்களிலும் முறையே.. அணிமா. மஹிமா.லஹிமா.கரிமா.ஈசித்துவ.வசித்வ.பிராப்தி.பிராகாம்ய. ஆகியசக்திகளை பூஜிக்க.

இந்திரசந்தி-(கிழக்கு) இதிலே பஞ்சகோணம் அல்லது அஷ்ட கோணம். தேவதை-யக்ஷசன்.

அக்கினிசந்தி -(தென்கிழககு) இதிலே திரிகோணம் அல்லது மூன்று வட்டக்கோணம். தேவதை-ராக்ஷஸன்.

யமசந்தி - (தெற்கு) இதிலே அறுகோணம் அல்லதுபஞ்சகோணம் தேவதை-சர்வபூதன்.

நிறுதிசந்தி -(தென்மேற்கு) இதிலே..வசுகோணம்அல்லது துவாதச கோணம். தேவதை-பிசாஸன்


வருணசந்தி- (மேற்கு) இதிலே-தசகோணம்.அல்லதுபஞ்சகோணம் அல்லது வசுகோணம். தேவதை- பிரம்மராட்சஸன்.

வாயுசந்தி -(வடமேற்கு) இதிலே பானுகோணம் அல்லது.ஷோடச கோணம். தேவதை- காளீ

குபேரசந்தி- (வடக்கு) அதிலே. திரிகோணம். தேவதை -சரல்யன்.

ஈசானசந்தி -(வடகிழக்கு) ஷட்திரிம்சத்கோணம்.அல்லதுதிரிகோணம் தேவதை- வடுகபைரவர்.


விநாயகருக்குரிய அஷ்டமங்கலம். 𑌗𑌣𑍇𑌶𑌾𑌷𑍍𑌟𑌮𑌂𑌗𑌲𑌮𑍍 ।



சத்ரம் (குடை)




ரத்னகும்பம்



மூஷிகம்



பத்மம்(கமலம்)



கார்முகம்(வில்)



தந்தம்



அங்குசம்




கட்வாங்கம்


அந்தணர்களுக்குரிய அஷ்டமங்களம். ஷிஜாஷ ஐ௦மஉலஃ ।

வதாகா ஶ௦வ வகூஜு ஹ௵ணுகூ௦ஹ௦ ஸ வதுகூ௦ ।வநூ௦ முகஷூ வுநீவஞு ஷிஜாநா௦ கூஷஐ௦மஉலஃ ॥
(ஹ௵வுகாரணெ)


கொடி




சங்கு




சக்கரம்.



பூர்ணகும்பம்





பத்திரம்



குடை



லட்சுமி




தீபம்


அரசர்க்குரிய அஷ்டமங்கலம்.. ராஜாஷ்டமங்கலம்

பேரீ வ்ருஷோ கஜஶ்சைவ சாமரீ கேஸரீ த்வஜ꞉ । தீபகாஶ்ச வ்ருஷீவது ஹ்யேதே ராஜாஷ்டமங்கலம் ।


பேரிகை.எருது. யானை சாமரை சிங்கம் குதிரை கொடி விளக்கு இவை அரசருக்குரிய அஷ்டமங்கலம்.(காரணாகமம்)



பேரி



எருது



யானை




சாமரை



சிங்கம்



குதிரை



கொடி



விளக்கு



வேளாளருக்குரிய அஷ்டமங்கலம். 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌷𑍍𑌟𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 |

𑌦𑌰𑍍𑌪𑌣𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌚 𑌧𑍍𑌵𑌜𑌂 𑌛𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌭𑍇𑌰𑌿𑌕𑌾 |𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌷𑍍𑌟𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ||𑌕𑌾𑌰𑌣𑍇


கண்ணாடி. பூர்ணகும்பம் கொடி. குடை பேரிகை ஸ்ரீவத்சம்.ஸ்வஸ்திகா தாமரை .இவை வேளாளருக்குரிய அஷ்டமங்கலம்..

(இது பூர்வகாரணாகமத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.)


கண்ணாடி.




பூர்ணகும்பம்




கொடி




குடை









மங்களபேரி



ஸ்ரீவத்சம்



ஸ்வஸ்திகா



தாமரை


தேவி அஷ்டமங்களம்.

𑌦𑍇𑌵𑍍𑌯𑌷𑍍𑌟 𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 (பூர்வகாரணாகமத்தில்)


𑌮𑌙𑍍𑌗𑌲𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿 𑌕𑍁𑌮𑍍𑌭𑌞𑍍𑌚 𑌕𑌟𑌕𑌞𑍍𑌚 𑌪𑌦𑍍𑌮𑌚𑌾𑌮𑌰𑌂 𑌦𑌰𑍍𑌪𑌣𑌂 𑌦𑍀𑌪𑌶𑍍𑌚𑍈𑌵 𑌦𑍇𑌵𑍍𑌯𑌷𑍍𑌟 𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥

தாலி.தேவிசக்திஆயுதம்.கும்பம்.கடகம். தாமரை சாமரை கண்ணாடி.தீபம் இவைகள் தேவிக்குரிய அஷ்டமங்களம்.


தாலி




சக்தி




கும்பம்



கைவளை



தாமரை



சாமரை



கண்ணாடி



தீபம்








தேவாஷ்டமங்கலம். ஜெவாஷ ஊஂமஉ॰ |


ஜவ்ணஂ வ௵ண்கூஂஸஞ வரஷஸஂ யஂஜவாஊஈ॰। ஸ்ரீவதஂ ஸஸிகஂ ஶஂவஂ ஓ்வஂ ஜெவாஷஊஂமஉ॰ ॥கூாணெ


கண்ணாடி. பூர்ணகும்பம். விருஷபம். சாமரை. ஸ்ரீவத்சம். ஸ்வஸ்திகம். சங்கம். தீபம்.இவைகள் சிவனுக்குரிய அஷ்டமங்கல பொருட்கள்ஆகும்..மற்றத்தெய்வங்களுக்கு விருஷபத்திற்கு பதிலாக அந்தந்த தெய்வத்தின் வாகனங்கள சேர்க்கப்படும். மேலும் தேவிக்கு வேறுஅஷ்டமங்கலமும்.நான்குவருணத்தவருக்கும் தனித்தனி அஷ்டமங்கலங்களும் முன்னால் காணலாம்.


தர்ப்பணம்



கும்பம்



விருஷபம்


சாமரை


சங்கம்


தீபம்


ஸ்ரீவத்சம்


சுவஸ்திகம்



அஷ்டமங்களத்தை தாங்கும் தேவகன்னியர். சுஷஉ௦மஉ௨௭।

ஊவ்ஶீயூத	ஜெநகாயூத	ஈ௦ஹாயூத	திஜொதஜாயூத
ஓவ்ணெ	வூ௯ண்கூ௦ஹெ	வூஷஹெ	யூ௯ஜாஉரொ




கண்ணாடியை ஏந்தும்ஊர்வசி   கும்பத்தைஏந்தும் மேனகை   விருஷபத்தைஏந்தும் ரம்பா   சாமரைஏந்தும் திலோத்தமா.



அஷ்டமங்கலத்தை தாங்கும் தேவகன்னியர். ௬ஷூ௨ං௴௨௳ ௐ।

ஶுௗஶூவீயுரத ஶுௗநுஶீயுரத ௬ாஶூவீயுரத ௬ா௨வ௬௦நீயுரத

ஶ்ரீவத்ஸ ஸ்வஸ்திகெ ஶංவெ ஶீவெ



ஶ்ரீவத்சம் தாங்கும் சுமுகீ


ஸ்வஸ்திகத்தை தாங்கும் சுந்தரி

சங்கைஏந்தும் காமுகீ

தீபத்தைஏந்தும் காமவர்தனி

தசாயுதங்கள்.....

வஜ்ரம் ஶக்திஞ்ச தண்டஞ்ச கட்கம் பாஶாங்குஶத்வயா ।
ஶஸ்த்ர த்ரிஶூலம் சக்ரஞ்ச பத்மஞ்சைவ தஶாயுதம் ॥




பிரசன்னாத்மக சக்தி   கிறுதயாத்மக சக்தி   கோபாத்மகசக்தி   குணாத்மகசக்தி

தசாயுதங்கள்.....தொடர்ச்சி.....

𑌵𑌜𑍍𑌰𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌞𑍍𑌚 𑌦𑌣𑍍𑌡𑌞𑍍𑌚 𑌖𑌡𑍍𑌗𑌂 𑌪𑌾𑌶𑌾𑌂𑌕𑍁𑌶𑌞𑍍𑌚𑌯𑌾 (𑌧𑍍𑌵𑌜𑌂) ।
𑌗𑌦𑌾 𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑌂 𑌚𑌕𑍍𑌰𑌞𑍍𑌚 𑌪𑌦𑍍𑌮𑌞𑍍𑌚𑍈𑌵 𑌦𑌶𑌾𑌯𑍁𑌧𑌾𑌃 ॥


பாசம்



நிர்மலீ

கோமளாத்மசக்தி


அங்குசம் **.துவஜம்.**



துர்மலீ

விஷாத்மகசக்தி


கதை




மதிக்கிராகீ

மகாத்மசக்தி


தசாயுதங்கள்.....(தொடர்ச்சி...)



கட்வாங்கம் (ஆயுதம்)



தலைக்கோல்



செங்கோல்



தேவச்செங்கோல்(கட்டியபொல்)






தெய்வஆயுதங்கள்..

சூய¬யாநி

கேடயம்




சிலம்பு



பரசு




உடுக்கை



கூய¯யாநி

பாசம்.



அங்குசம்.



தந்தம்.



வேதாளம்



வஜ்ரம்






அம்பு




வில்



சக்ரம்



வாள்



கேடயம்


தெய்வ ஆயுதங்கள். தொடர்ச்சி...



பரசு



கரும்புவில்



சங்கு



புஷ்பபாணம்



கோடரி



அக்ஷமாலை




சாமரம்



க்ஷுரிகம்




தீஅகல்





வீணா

தெய்வ ஆயுதங்கள்.

உடைவாள்







கூரவாணஂ


யொமழுணஂ



ஸ்ரீவத்சம்




ஸ்ரீவத்சம் இன்னொரு வகை




ஶ்ரீவத்ஸ

சக்தியாயுதம்




ஶக்தி

தெய்வ ஆயுதங்கள்.



கொடிஸ்தம்பம்

கொடிமரம்-பதி (இறைவன்)
கொடிச்சீலை-பசு (ஆன்மா)
மஞ்சள்கயிறு.திருவருட்சக்தி (திரோதானசக்தி)



கொடிமரம் - வன்னி.இலுப்பை ஹிந்தாலம்.சாலவிருட்சம்.பனை கமுகு.கருங்காலி.சந்தணமரம் பனை.சம்பகம்.அரசு.ஆல்.தேவதாரு பலாசு.மூங்கில்.தாலம்.சீர்ஷம் ஆகியமரங்களில் செய்யவிதியுண்டு.

5 முதல் 24 முளம்வரை ஸ்தம்பம் அமைக்கலாம்.

மூன்றுமேகலையுடன் உபவேதிகை பத்மம்ஆகியவற்றுடன் அமைதல் வேண்டும்.




ஸ்தம்பம் பிரதிஷ்டை

மூலாலயபிரதிஷ்டையின் பின்தான் செய்யப்படவேண்டும். பிரதிஷ்டையின்போது ரத்னந்நியாசம் செய்து தங்கத்தால் அல்லது வெள்ளியினால் விருஷபம்-ஆமை செய்து தண்டத்தின் அடியில் வைக்கப்படவேண்டும்.தண்டத்தின் 3ல்1பாகம் பூமிக்குள் நிறுத்துதல் வேண்டும்.

எமதுஉடலில் 32கட்டுக்களைக்கொண்டமுள்ளந்தண்டைப் போன்ற அமைப்பே கொடிமரமாகும்.கற்பக்கிரகத்தின் விமானசிகரஉயரத்திற்கு அமைவது உத்தமமாகும்.முதல்நிலைசிற்பத்தின் உயரத்திற்கோ கற்பக்கிரக பிரஸ்தரஉயரத்திற்கோமத்திமாக அமைதல்வேண்டும் கொடிமரம் பதியாகிய இறைவனைக்குறிக்கிறது. கொடிச்சீலை பசுவாகியஆன்மகோடிகளை குறிக்கிறது. தர்பைக்கயிறு.ஆன்மாவை பந்தித்திருக்கும் பாசத்தைக்குறிக்கிறது.மஞ்சள்கயிறு திரோதான சக்தியாகிய திருவருளைக்குறிக்கிறது.சீலையில்வரையபடும் நந்தி இருநிலையொப்புஅடைந்த(நன்மையும் தீமையும்.சுகமும்துக்கமும் ஒன்றாகநினைக்கும்பக்குவம்)பரிபக்குவஆன்மாவாகவும் சுற்றிவரையப்பட்டபொருட்கள்ஆன்மாக்கள் விரும்பும்போகங்களையும் குறிக்கும். கொடிச்சீலைக்குள் தர்பைக்கயிற்றை உள்ளேவைத்து முறுக்குதல் வேண்டும்.ஏனெனில் கண்ணுக்குப்புலப்படாத பாசம் சீலையாகிய ஆன்மாவைஉள்ளிருந்து முறிக்கிக்கொண்டு இருக்கிறது என்பதை புலப்படுத்தவேயாகும்.சிலர் தம்பத்தில் தர்பைக்கயிற்றை கட்டுகிறார்கள்.அது தவறாகும்.(ஏனெனில்.சிவனை பாசம்பற்றியதுபோல்ஆகும்) பாசத்தில் அகப்பட்ட ஆன்மா பதியை பற்றிப்பிடிக்க ஜீவான்மா பாசம்மறைந்து பரமாத்மாவுடன் இணைகிறது.இதுவே சித்தாந்தம்.

[illegible]
[illegible]

சிவன்.அம்பாள் கொடிச்சீலை



த்துவஜ ஆரோஹறணம்


மூன்றுநாடிகள்-

1. சுழுமுனை 2. இடை
3. பிங்கலை இவை மூலாதாரத்தில் குண்டலினியில்இருந்து மேல்நோக்கி சகஸ்ராரம் வரை வருமபொழுது இறைஞானம் பரமுத்திகிடைக்கிறது. அதனாலதான் கொடிச்சீலை.கயிறு தெர்பை ஆகியமூன்றும் மேல்நோக்கி செல்கிறது.


நடுவில் வரையப்பட்ட ஆன்மாவாகிய பசு பரமசிவனின் திரிசூலமுத்திரை யைச் நெஞ்சிலே சுமந்துகொண்டு உலக பந்த பாசங்களில்இருந்து விடுபட்டு திருவருட்சக்தியின் துணையோடு பரமுத்திநாடிச்செல்லுகிறது.



விநாயகர் கொடிச்சீலை



துர்க்கை-காளி-மாரி கொடிச்சீலை



தேர் (ரதம்)

தேருக்குரியமரங்கள்-சாலவிருட்சம்.நாவல்.சாரம்.மகிழ்.அர்யுனதூதம் பர்பரம்.வியாக்ரீ.கருங்காலி.கிருஷீரிணீ.கிருசரம் கிருதமாலம்.வன்னி.ஆகிய மரங்கள்

சதுரவடிவான தேர்- நபஸ்வரபத்திரகம் என்றும். **அறுகோணவடிவான தேரை -** பிரபாஞ்சனபத்ரகம் என்றும் கூறுவர்.

மேலும்...விதானபத்ரகம்.பவனபத்ரகம். பிருஷதபத்ரகம்.சந்திரபத்ரகம்.அநிலபத்ரகம் என ஐந்துவகை தேர்கள் ஆகமங்களில் கூறப்படுகிறது.

நித்யோற்சவத்திற்கு- ஐந்துசில்லுடைய தேர். மஹோற்சவத்திற்கு 6முதல் 10 சில் கொண்ட தேர்அமைதல் வேண்டும்.

சிவனுக்கு- 9 வேதிகையுடையதேரும்.மற்றதெய்வங்களுக்கு 5 வேதிகையுடைய தேரும் அமைத்தல் வேண்டும்.

தேரில்.. குக்ஷி. அக்ஷம். தந்தம். சித்ரம். கீலம் என5வகைஉறுப்புக்கள்உண்டு.






சூரியசந்திரர்கள் - சில்லுகளாகவும்.
பூலோகம் - தேரின்தட்டாகவும்.
64கலைஞானங்கள்-தேரின் முனைகளாகவும்.
சுவர்கம் - ஆசனபீடமாகவும்.
வேதாங்கங்கள் - மேல்விட்டமாவும்.
இமயமலை - அலங்கார முன்உறுப்புக்கள்.
உதயகிரியை .கொடிகளாகவும்
அண்டங்கள் - மாலைகளாகவும்.
நட்சத்திரங்கள்- விதானமாவும்.
சப்தசமுத்திரங்கள்- அலங்காரதுணிகளாகவும்.
சப்ததீர்த்தங்கள்-சாமரைகளாகவும்
வேதங்கள் குதிரைகளாகவும்
வசுக்கள் கடிவாளங்களாகவும்
உபநிடதங்கள் மணிகளாகவும்.
பிரம்மா சாரதியாகவும்.
பிரணவம் சவுக்காகவும்.அமையும்


முத்திராலட்சணம்

ஆவாகனம்




(வரவழைத்தல்)

ஸ்தாபனம்




(அமரும்படிவேண்டுதல்)

சந்நிதானம்



(சாந்நித்யம்பெறுதல்)

சந்நிரோதனம்



(அருள்புரியவேண்டுதல்)

திக்பந்தனம்




(அருளுக்குஇடையூறுவராமல் கட்டுதல்)

தேனுமுத்திரை




(காமதேனுவின்பாலால் பாதங்களை அபிஷேகித்தல்)

பத்மம்



(தாமரைமலர் சமர்ப்பித்தல்)


திரிசூலம்



